## மக்களைக் காக்கும் மகத்தான முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு!

# சென்னை மாநகரில் மின்னல் வேகப் பணிகள்!

## மழைநீரை அகற்றும் பணியில் இரவு பகல் பாராது பணியாற்றும் அதிகாரிகள் – ஊழியர்கள்!



பெருநகர சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டலம் வார்டு – 56 பிரகாசம் சாலை, நேற்று (15.10.2024) வடகிழக்கு பருவ மழையை தொடர்ந்து இரவு முதல் பெய்த கன மழை காரணமாக தாழ்வான பகுதியில் தேங்கி நிற்கின்ற மழை நீரைஅகற்றும் பணி நடைபெற்றுவருகிறது.



நேற்று (15.10.2024) பெருநகர சென்னை மாநகராட்சி மணலி மண்டலம் பகுதியில் கண்காணிப்பாளர் பெ.குமாரவேல் பாண்டியன் வெள்ள நிவாரண சமையல் கூடத்தினை ஆய்வு செய்தார்கள்.




பெருநகர சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டலம் 56 வார்டில் , நேற்று (15.10.2024) வடகிழக்கு பருவமழையை தொடர்ந்து இரவு முதல் பெய்த கன மழை காரணமாக தாழ்வான பகுதியில் தேங்கி நிற்கின்ற மழை நீரைஅகற்றும் பணி நடைபெற்றுவருகிறது.



வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், இந்திரா நகர், 2வது அவென்யூ பகுதியில் தேங்கியுள்ள மழைநீரினை மோட்டார் பம்புகள் மூலம் மாநகராட்சி ஊழியர்கள் அகற்றி வருகின்றனர்.



வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, மழைக்கால முன்னெச்சரிக்கை நடடிக்கையாக, பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம், வார்டு – 189க்குட்பட்ட பள்ளிக்கரணை வி.ஜி.எஸ். மஹாலில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் வந்தடைந்தனர், உடன் அரசு அலுவலர்கள் உள்ளனர்.




வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு – 49க்குட்பட்ட காசிமேடு, சூர்ய நாராயணா சாலையில் 14.10.2024 அன்று இரவு முதல் பெய்து வரும் கனமழை காரணமாக தாழ்வான பகுதியில் தேங்கி நிற்கின்ற மழைநீரை சென்னைக் குடிநீர் வாரியத்தின் சூப்பர் சக்கர் இயந்திரம் மூலம் மாநகராட்சி பணியாளர்கள் நேற்று (15.10.2024) வெளியேற்றி வருகின்றனர்.



வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாகராட்சி, மணலி மண்டலம், வார்டு – 18க்குட்பட்ட பகுதியில் உள்ள மழைநீரினை ஜேசிபி இயந்திரம் மற்றும் மோட்டார் பம்புகள் மூலம் எஸ்.ஆர்.எஃப். கால்வாயில் வெளியேற்றும் பணியினை மணலி மண்டல கண்காணிப்பு அலுவலர் பெ.குமரவேல் பாண்டியன், நேற்று (15.10.2024) பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மண்டல அலுவலர் கோவிந்தராஜ், செயற்பொறியாளர் தேவேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம், ஆலப்பாக்கம் பகுதியில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர்/ மண்டல கண்காணிப்பு அலுவலர் அ.சிவஞானம், மற்றும் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி ஆகியோர் நேற்று (15.10.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, தேங்கியுள்ள மழைநீரை மோட்டார் மூலம் வெளியேற்றும் பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட மாநகராட்சி பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்கள். உடன் வளசரவாக்கம் மண்டல செயற்பொறியாளர் பானுகுமார் மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் உள்ளனர்.



வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர்/கோடம்பாக்கம் மண்டல கண்காணிப்பு அலுவலர் டாக்டர் எஸ். விசாகன், நேற்று (15.10.2024) கோடம்பாக்கம் மண்டலம், ஜாபர்கான்பேட்டை, புகழேந்தி தெருவிலுள்ள மழைநீரானது எம்ஜிஆர் கால்வாய் வழியாக அடையாறு ஆற்றில் தங்குதடையின்றி செல்வதை ஆய்வு செய்தார்கள்.




வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், சாஸ்திரி நகர், 9வது தெருவில் டிராக்டரில் பொருத்தப்பட்ட மோட்டார் பம்புகள் மூலம் மழைநீர் வெளியேற்றும் பணி நேற்று (15.10.2024) நடைபெற்றது.




வடகிழக்குப் பருவமழையினை தொடர்ந்து நேற்று (15.10.2024) பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மண்டலம், கணபதி தோட்டம் பகுதியில் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் மாநகராட்சி பணியாளர்கள் மழைநீரை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.